# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## பெறுமதி சேர் வரி

## 2011 செப்டம்பர் மாதத்திற்கான மாதாந்த விபரத்திரட்டுக்களை சமர்ப்பித்தலும் 2011 செப்டம்பர் 30 இல் முடிவடைந்த காலாண்டுக்காக காலாண்டு விபரத்திரட்டுக்களைச் சமர்ப்பித்தலும்

**01. பெ.சே.வ விபரத்திரட்டை மாதாந்தம் சமர்ப்பிக்கும் வரி செலுத்துனர்களுக்கு (பூச்சிய விகித வழங்குநர்கள்)**

- ❖ கொடுப்பனவு மற்றும் விபரத்திரட்டுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2011.10.20

**02. பெ.சே.வ விபரத்திரட்டுக்களை காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கும் வரி செலுத்துநர்களுக்கு.**

- ❖ 2011.09.30 இல் முடிவடைந்த காலாண்டுக்கான பெ.சே.வரி மாதாந்த தவணைக் கொடுப்பனவின் இறுதிக் கொடுப்பனவு மற்றும் விபரத்திரட்டுக்களைச் சமர்ப்பிப் பதற்கான இறுதித் திகதி 2011.10.20

**03. நிதிச்சேவைகளை வழங்கும் வரி செலுத்துநர்களுக்கு (நிதி பெ.சே.வ)**

- ❖ 2011.12.31 இல் முடிவடைந்த அரையாண்டுக்கான நிதிச் சேவைகள் மீதான பெ.சே.வ தவணைக் கொடுப்பனவின் 3 ஆவது கொடுப்பனவுக்கான இறுதித் திகதி 2011.10.20

- ❖ நிதிச்சேவைகள் மீதான பெ.சே.வரியினை செலுத்துவதற்கு பொறுப்புடைய ஒவ்வொரு ஆளும், அத்தகைய ஆளினால் அத்தகைய நிறுவனம் ஒவ்வொன்றிலும் தாபிக்கப்பட்ட முதலீட்டு நிதியக் கணக்கு (ஐஎப்ஏ) ஒன்றில் பெறுமதி சேர்ப்பில் 8% இற்கு சமமான தொகையொன்றினை வைப்புச் செய்வதற்கு வேண்டப்பட்டார் (நிதியியற் சேவைகள் மீதான பெ.சே.வ கொடுப்பனவு நோக்கத்திற்காக கணக்கீடு செய்யப்பட்டது.)

**குறிப்பு :**

- ❖ 2011.01.01 ஆம் திகதி அல்லது பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கோரிக்கை மீதான உள்ளீட்டு வரவு பெ.சே. வரியின் கழிப்பனவு மீதான வரையறை ஏதேனும் வரி விலைப்பட்டியல் அல்லது சுங்க வெளிப்படுத்தல்களுடன் தொடர்பில் பெ.சே.வரி வெளியீட்டின் 100% த்திற்கு தளர்த்தப்பட்டுள்ளது.

- ❖ பெ.சே.வ சட்டத்தின் தொடர்புடைய ஏற்பாடுகளின் கீழ் கணக்கிடப்பட்ட 2010.12.31 அன்றுள்ளவாறான ஏதேனும் உள்ளீர்க்கப்படாத பெ.சே.வ உள்ளீட்டு வரிகள் வெளியீட்டு வரியிலிருந்து கழிப்பதற்கு இடமளிக்கப்படும்.

  - 2010.12.31 அன்றுள்ளவாறு நிலுவையாக இருந்த மொத்த கழிக்கப்படாத வரியில் ஆகக்கூடியது 10%;
  - பெ.சே.வரி செலுத்த வேண்டியவற்றில் 5% (உள்ளீட்டு வரியினை கழித்ததன் பின்னர்), எது குறைவானதோ அது.

  எவ்வாறாயினும், அனுமதிக்கத்தக்க மொத்த உள்ளீட்டு வரவுகள் வரி விதிக்கத்தக்க காலப்பகுதியில், பெ.சே.வரியின் வெளியீட்டில் 100% விஞ்சுதலாகாது.

- ❖ வரி செலுத்துநர் பெ.சே.வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டால் அல்லது 2010.12.31 ஆம் திகதிக்குப் பின்னர் ஏதேனும் வேறு காரணங்களினால் பெ.சே.வ செலுத்துவதற்கு பொறுப்பாகமாட்டார் என்ற போது, அத்தகைய உள்வாங்கப்படாத பெ.சே.வ உள்ளீட்டு பற்றுகள், தொலைத்தொடர்பு அறவீடு, அல்லது வருமான வரி, அல்லது பொருளாதார சேவைக் கட்டணம் அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நிர்வகிக்கப்படும் ஏதேனும் பிற வரிகளிலிருந்து கழிப்பனவு செய்யப்படலாம்.

**கொடுப்பனவுகள் ஏதேனுமொரு இலங்கை வங்கிக் கிளையில் மேற்கொள்ளப்படலாம்.**

**தயவுகூர்ந்து காசோலையின் மறுபுறத்தில் வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தையும் வரி அறவீட்டுக் காலத்தையும் குறிப்பிடவும்.**

மேலதிக விபரங்களுக்காக தயவுசெய்து பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| பெ.சே.வரிப் பிரிவு | - | தொலைபேசி- | 011-2338541, 011-2338924, 011-2338591 |
| நிதிச் சேவைகள் பிரிவு | - | தொலைபேசி- | 011-2338941, 011-2338957 |
| வரி செலுத்துநர் சேவைப்பிரிவு | - | தொலைபேசி- | 011-2328702, 011-3009093, 011-3009257 |
| செயலகக் கிளை | - | தொலைபேசி- | 011-2338635, 011-2338570 |

**உள்நாட்டு இறைவரி இணையத்தளம்** : www.inlandrevenue.gov.lk

**தயவுசெய்து கொடுப்பனவை உரிய நேரத்தில் மேற்கொள்ளவும்**

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

INLAND REVENUE SRI LANKA

வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக